# கோரிக்கைகளை வலியுறுத்தி நெல்லை கலெக்டர் சுகுமாரிடம் ராஜா எம்எல்ஏ மனு



**சங்கரன்கோவில்.ஜூலை.17.**
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நெல்லை கலெக்டர் சுகுமாரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள மானூர் வட்டம். சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சம்பட்டி கிராமம் மஜரா தெற்கு அச்சம்பட்டி அருந்ததியர் சமுதாய மக்கள் வழிபடும் ஸ்ரீபாலுடையார் கருப்பசாமி, கொம்பு மாடன், பேச்சியம்மாள் கோயில் உள்ளது. இந்த கோயில் முன்பு பொங்கல் வைக்க மற்றும் நின்று சாமி கும்பிட தாழ்வாரம் இல்லை. மழை, வெயில் காலங்களில் மிகுந்த சிரமமாக உள்ளதால் முன்பகுதியில் தாழ்வாரம் அமைத்து தர வேண்டும் எனவும், மேற்படி கிராமம் இந்து அருந்ததியர் சமுதாய மக்கள் வேண்டுதலின்படி மேற்படி கோயிலின் முன்பு தாழ்வாரம், அறநிலைத்துறையின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கான சிறப்பு நிதியில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய ஆவன செய்ய வேண்டும் எனவும், மேலும் திருநெல்வேலி மாவட்டம் மானூர் வட்டம் வன்னிக்கோனேந்தல் கிராமம் நல்லம்புளியம்பட்டி, தெற்கு புளியம்பட்டி சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டது. இந்த கிராமத்திற்கு பொது விநியோக பொருட்கள் வன்னிக்கோனேந்தல் கடை எண் - 2 லிருந்து பொருட்கள் எடுத்துச் சென்று தனியார் கட்டிடத்தில் வைத்து விநியோகம் செய்து வருகின்றனர். மேற்படி கிராமத்தில் பொது விநியோகத் திட்டத்தில் பொருட்கள் வழங்க தேசிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து ரேசன் கடை கட்டிடம் கட்டித் தர வேண்டும் எனவும் , மேலும் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள பஞ்சாயத்து பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்றி தர வேண்டும் எனவும், அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த சந்திப்பின்போது மேலநீலிதநல்லூர் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பால்ராஜ் உடன் இருந்தார்.



**ஆலங்குளத்தில் உள்ள காமராஜர் திருவுருவசிலைக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் மாநில தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் பொருளாளர் சுப்ரமணியன், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் வழக்கறிஞர் ராஜா நாடார், தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார், மணிகண்டன், கிருஷ்ணமூர்த்தி, சமுத்திரராஜ் ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

# தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக புளியங்குடி நகர்மன்ற தலைவர் கோரிக்கை மனு

**தென்காசி ஜூலை.17**
தமிழக வாழ்வுரிமை கட்சி தென்காசி மேற்கு மாவட்டம் புளியங்குடி நகராட்சிக்கு உட்பட்ட 12 வது வார்டு காயிதே மில்லத் நகர் மேற்கு பகுதி 1ம் தெரு, 2ம் தெரு, 3ம் தெரு, 4ம் தெரு பொதுமக்கள் சார்பாக நீண்ட நாள் கோரிக்கையான குடிநீர் வசதி மற்றும் வாறுகால் வசதி செய்துதர கோரி புளியங்குடி நகர்மன்ற தலைவர் .விஜயா சௌந்தர பாண்டியனிடம் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்று இன்னும் ஒரு மாத காலத்திற்கு செய்து தருவதாக வாக்குறுதி தந்துள்ளார். இந்நிகழ்ச்சியில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் தென்காசி மேற்கு மாவட்ட செயலாளர் முகைதீன் தலைமையில் மாவட்ட துணை செயலாளர் தங்க நிலா, சாகுல் ஹமீது, முஸ்லிம் லீக் சோப்பு யூசுப் மற்றும் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் செல்வகுமார், மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் கமீது, வாசு ஒன்றிய செயலாளர் மைதீன் அப்துல் காதர் மற்றும் 12 வது வார்டு அவுலியா, செயலாளர் ,பிலால் நகர் மைதீன் மற்றும் 12 வது வார்டு பொதுமக்கள் எனத் திரளாக கலந்து கொண்டனர்

# உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் கமல்கிஷோர் துவக்கி வைத்தார்



**தென்காசி ஜூலை.17:**
தென்காசி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை மாவட்ட குடும்பநலச் செயலகம் துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**பேரணி**
தென்காசி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை மாவட்ட குடும்பநலச் செயலகம் துறையின் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு ரதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

1987- ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதி உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. பெருகி வரும் மக்கள் தொகை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த நாள் உலக மக்கள் தொகை தினமாக ஐக்கிய நாடுகள் சபையில் அறிவிக்கப்பட்டது.

ஆலடி அருணா செவிலியர் பயிற்சி கல்லூரி மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் தொடங்கி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வரை நடைபெற்றது. இப்பேரணியில் இம்மானுவேல் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். பேரணியில் மாணவிகள் குடும்ப நலம் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கொண்டு சென்றனர். இந்நிகழ்ச்சியில் குடும்ப நலம் மற்றும் தாய்சேய் நல சேவைகளை தங்கு தடையின்றி வழங்குவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

உலக மக்கள் தொகை தினம் 2025-ன் முழக்கமாக 'உடலும் மனமும் பக்குவமடைந்து உறுதியாகும் வயது 21, அதுவே பெண்ணுக்கு திருமணத்திற்கும், தாய்மையடைவதற்கும் உகந்த வயது'' மற்றும் கருப்பொருளாக 'ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு, திட்டமிட்ட பெற்றோருக்கான அடையாளம்'' என்ற நோக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் உலகமக்கள்தொகை தின உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, ஜே.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்' இளம் வயது திருமணம் மற்றும் கர்ப்பம் அதனால் பெண்களுக்கு ஏற்படும் விளைவுகள் அதனை எதிர்கொள்ளும் வழி முறைகள்'' குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் திரளான மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் நலப்பணிகள், மரு. பிரேமலதா, குடும்ப நல பொறுப்பு அதிகாரி மரு. அனிதா பாலின், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன், துணை இயக்குநர்கள் மரு.துரை (காசநோய்), மரு.அலர்சாந்தி (தொழுநோய்) மாவட்ட குடும்ப நலத் துறையை சார்ந்த மக்கள் கல்வி தகவல் அலுவலர் (பொ) ஜெய சித்ரா, இளநிலை நிர்வாக அலுவலர் கூத்தநயினார் என்ற செந்தில், புள்ளி விபர உதவியாளர் வேலு, செய்திமக்கள் தொடர்பு அலுவலர் எடிசன் மற்றும் வட்டார சுகாதாரப் புள்ளியியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி எம்கேவிகே பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் போட்டி



**தென்காசி ஜூலை.17**
தென்காசி எம் கே வி கே பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமான கல்வி வளர்ச்சி நாள் போட்டிகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன .மாணவ மாணவிகளின் தமிழ் ஆர்வம் மற்றும் புலனை சோதிக்கும் வகையில் சொல் விளையாட்டு, சொல் சங்கிலி ,வினாடி வினா போட்டிகளும், கல்விக்கண் திறந்தவர் காமராசர் ,கல்வி வளர்ச்சிப் பணியில் அவரின் பங்களிப்பு மற்றும் கல்வியின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புகளில் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி ஆகியவை நடத்தப்பட்டன. மழலையருக்கு திருக்குறள், கதை சொல்லுதல் மற்றும் என் கனவு பள்ளி என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டிகளும் சிறப்புடன் நடைபெற்றன. பல்வேறு இந்திய தலைவர்களை மாணவர்கள் மாறுவேடம் அணிந்து சிறப்பு செய்தனர். இத்தினத்தை முன்னிட்டு ஏற்பாடுகள் செய்த தமிழ்துறை ஆசிரியர்கள் முகைதீன்பிச்சை,. சக்திவேல்,அந்தோனி பிரகாஷ், கதிஜா பானு ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தனர்

# இலத்தூர் காஞ்சி மகான் தவத்திரு சிவானந்த சிதம்பர சுவாமிகளின் 114வது குருபூஜை



**தென்காசி ஜீலை17:**
தென்காசி மாவட்டம் இலத்தூர் கீழத்தெருவில் அமைந்திருக்கும் காஞ்சி மகான் தவத்திரு ஸ்ரீ சிவானந்த சிதம்பர சுவாமிகளின் 114வது குருபூஜை விழா வரும் ஆக.13ம் தேதி சிறப்பாக நடைபெற உள்ளது. காலை ஆறு மணிக்கு தன ஆகர்ஷன சங்கல்ப பூஜையும், எட்டு மணிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் யாக பூஜையும், ஒன்பது மணிக்கு நல்லாசிரியர் பழனி பார்வதி மீனாட்சிசுந்தரம் அவர்களின் "சித்தர்களின் மகிமை" என்ற தலைப்பில் பக்தி சொற்பொழிவும், பத்து மணிக்கு திருவாசகம் முற்றோதல் நிகழ்வும், பண்ணிரண்டு மணிக்கு அருள் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை சிறப்பு இலவச "சித்த மருத்துவ முகாம் மருத்துவர்கள். நடராஜன், சண்முகம், ஸ்ரீநிதி,, கிருஷ்ணவேணி, மாரி செல்வி மருத்துவக் குழுவின் மருத்துவ முகாம் நடைபெறுகிறது என்று விழா குழுவினர் தெரிவித்தனர்.

# காமராஜரின் 122 வது பிறந்த தின விழா கொண்டாட்டம்



**தென்காசி ஜூலை 17**
தென்காசி மாவட்டம் செங்கோட்டை அடுத்துள்ள பெரிய பிள்ளை வலசை கிராமத்தில் அமைந்துள்ள காமராஜரின் திருவுருவச் சிலைக்கு பெரிய பிள்ளை வலசை திமுக கிளைச் செயலாளர் முருகேசன் தலைமையில் தென்காசி மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வல்லம் திவான் ஒலி, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஷேக் அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கரிசல் வேலுச்சாமி, மாநில பொதுக்குழு உறுப்பினர் தமிழ்ச்செல்வி, கிளைச் செயலாளர் கருப்பசாமி, கலங்காத கண்டி சரவணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பகுருதீன் பாவா, வல்லம் அஜிஸ், சண்முகவேல், மாசாணம், வேல்சாமி, சுப்பையா, மாரியப்பன், ஆறுமுகசாமி உட்பட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்

# நல்லமணி சிபிஎஸ்சி பள்ளியில் காமராஜர் விழா கொண்டாட்டம்

**தென்காசி ஜூலை17:**
நல்லமணி சிபிஎஸ்சி பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் 122வது பிறந்தநாள் விழாவானது ஆண்டு தோறும் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படுகிறது. இவ்விழாவானது கொடிக்குறிச்சியில் உள்ள நல்லமணி வித்யாலயா சிபிஎஸ்சி பள்ளியில் சீரும் சிறப்புடன் நடைபெற்றது. மாணவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். விழாவிற்கு பள்ளி தாளாளர் டாக்டர்.என். மணிமாறன் தலைமை தாங்கி காமராஜரின் சாதனைகளை மாணவர்கள் மத்தியில் சிறப்புரை ஆற்றி பரிசுகள் வழங்கினார். பள்ளி மாணவர்கள் காமராஜரின் வழி நடப்போம் கல்வி கற்போம் என உறுதிமொழி எடுத்தனர்.பள்ளி முதல்வர் டேவிட் ம எழில்வாணன் நன்றியுரை வழங்கினார்.

# நெல்லை அன்னை வேளாங்கன்னி மருத்துவமனையில் கால், கணுக்கால், பாதம், ஆர்த்தோ பிரிவு துவக்கம்



நெல்லை,ஜூலை.17
அன்னை வேளாங்கன்னி மருத்துவமனையில் கால், கணுக்கால், பாதம், ஆர்த்தோ பிரிவு மற்றும் முதுகெலும்பு (கீ ஹோல்) அறுவை சிகிச்சை பிரிவு துவக்கப்பட்டது இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக கால், கணுக்கால், பாதம், ஆர்த்தோ பிரிவு, டாக்டர். பிரேம சந்திரன் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.மேலும் முதுகெலும்பு நுண்துளை (கீ ஹோல்) அறுவை சிகிச்சை பிரிவு டாக்டர். மணிகண்டன் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. மேலும் பிசியோதெரபி மருத்துவ பிரிவில் *Laser shock therapy* என்னும் புதிய கருவி தொடங்கி வைக்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் டாக்டர். பிரான்சிஸ் ராய், டாக்டர். ஜி ஜி செல்வன், டாக்டர் அந்தோணி ராஜ், டாக்டர். பாலமுருகன், டாக்டர்.பாலாஜி சர்மா, டாக்டர். முத்துராமன், டாக்டர் அபுபக்கர், மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டியில் அதிமுக சார்பில் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**கோவில்பட்டி ஜூலை 17**
காமராஜர் 123வது பிறந்த நாளை முன்னிட்டு கோவில்பட்டியில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அதிமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

கடம்பூர் ராஜூ எம்எல்ஏ ஆலோசனையின் பேரில் அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் எம்.ஆர்.வி.கவியரசன் தலைமையில் கோவில்பட்டி நகர அம்மா பேரவை செயலாளர் ஆபிரகாம் அய்யாதுரை முன்னிலையில் அதிமுக வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் இந்நிகழ்வில் அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் அழகர்சாமி நகர துணை செயலாளர் மாதவராஜ், நகர அண்ணா தொழிற்சங்க செயலாளர் ரமேஷ், ஒன்றிய மாணவரணி தலைவர் அருண்குமார் கிளைச் செயலாளர் மருத்துவர். வெற்றிசிகாமணி இளைஞர் பாசறை நிர்வாகிகள் சூரியா, சக்தீஸ்வரன், அருண்பாலாஜி, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# தொடுவானம் கலை இலக்கிய பேரவை சார்பில் நூல் வெளியீட்டு விழா

**கோவில்பட்டி ஜூலை 17**
தூத்துக்குடி ஆயர் இல்ல இளையோர் அரங்கில் தொடுவானம் கலை இலக்கியப் பேரவை மற்றும் காட்சில்லா கலைக்கூடம் பதிப்பகம் சார்பில் நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் விழா நடைபெற்றது.விழாவில், அருட்தந்தை செல்வராசு தலைமை வகித்தார்.

பணி நிறைவு தமிழாசிரியர் புலவர் முத்துசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் தூத்துக்குடி கவிஞர் நெல்லை தேவனின் வலிகளின் ஊர்வலம் என்ற கவிதைத் தொகுப்பு நூலை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் அறம் வெளியிட,தமிழ்ச் செம்மல் முத்தாலங்குறிச்சி காமராசு அவர்கள் பெற்றுக் கொண்டார். தேரி எழுத்தாளர் கண்ணகுமார, விஸ்வரூபன், மற்றும் திருச்சி எழுத்தாளர் ஏகரசி தினேஷ் ஆகியோர் நூல் திறனாய்வு உரை நிகழ்த்தினர். பணிநிறைவு ஆசிரியர் அல்பர்ட், பணி நிறைவு நெடுஞ்சாலைத்துறை கவிஞர் செல்வராஜ், பணிநிறைவு வங்கி மேலாளர் மாணிக்கவாசகம், இலக்கிய ஆர்வலர் லாரன்ஸ், தமிழ் இலக்கிய பேரவைச் செயலர் அருமைநாயகம், அரங்கக்கலைப் பயிற்றுநர் கலைவளர்மணி சக்திவேல், குறும்பட இயக்குனர் அருந்ததி அரசு, கவிஞர் செந்தில்குமார், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வலிகளின் ஊர்வலம் நூலாசிரியர், கவிஞர் நெல்லை தேவன் ஏற்புரை நிகழ்த்தினார். தொடுவானம் கலை இலக்கியப் பேரவை சார்பில், இராஜபாளையம் மணிமேகலை மன்றத்தின் தலைவர் டாக்டர் கொ. மா.கோதண்டத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், முத்தாலங்குறிச்சி காமராசுவிற்கு தொடுவானம் இலக்கியச்சுடர் விருதும், தூத்துக்குடி சகா கலைக்குழு நிறுவனர் முனைவர் சங்கருக்கு தொடுவானம் கலைச்சுடர் விருதும் வழங்கிச் சிறப்பித்தனர்.

# கோவில்பட்டியில் காங்கிரஸ் கட்சி சார்பில் காமராஜர் பிறந்த நாள் விழா



**கோவில்பட்டி ஜூலை 17**
காமராஜர் 123 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கோவில்பட்டி நகர காங்கிரஸ் 5வது வார்டு காங்கிரஸ் கமிட்டி சார்பில் நகரத் தலைவர் மற்றும் மாவட்ட பொறுப்பாளர் கே டி பி. அருண்பாண்டியன் தலைமையில் பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வேலாயுதபுரம் ராஜுவ் காந்தி படிப்பகம் முன்பு நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் துரைராஜ், மருத்துவ அணி மாவட்ட தலைவர் டாக்டர் ஏ கே. மாறன், ஐ என் டி யு சி மாவட்ட பொது செயலாளர் ராஜா சேகரன், சமூக ஊடக பிரிவு மாவட்ட தலைவர் ராஜா சேகரன், மாவட்ட பொது செயலாளர் சண்முகராஜா முன்னாள் உதவி ஆய்வாளர் சண்முகம் ஆகியோர் முன்னிலையில் 5வது வார்டு தலைவர் கேடி. பிச்சை கனி-மதி அவர்கள் வரவேற்று பேசினார். நிகழ்ச்சி க்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பொறுப்பாளர்கள் ஆர். காமராஜ், பிரேம் குமார், ஈபி. பிரேம் குமார் மாவட்ட பொருளாளர் கார்த்திக் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார்கள்

பிசிசி. உறுப்பினர் வழக்கறிஞர் ஜே. மகேஷ் குமார் சிறுபான்மையினரின் பிரிவு தலைவர் அருள் தாஸ், வழக்கறிஞர் முத்துராமலிங்கம் சிவப்பிரகாசம், முத்து ராமலிங்கம், ஜோஷ்வா, சுடலைமணி, மாரியப்பன், சுரேஷ் பாண்டியன், மகா பிரபு தர்மர், பழனி சாமி, மஹேந்திரன், முருகன், முருகேசன், மூக்கையா, வேலசாமி, கோபால், சண்முகவேல், கழுகுமலை நகர தலைவர் மரிய தங்கராஜ், வைரவராஜ், பால கனேஷ், அருண் ராஜ், ஜான்சன், மதன், கார்த்திக் குமார், பாலமுருகன், எஸ் எம். தாஸ், கிறிஸ்துராஜா, மரகதம், மரிய சூசை ராஜ் பொம்மி, கனகா நல்லமதிமேலும் காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# திருச்செந்தூர் கோவிலில் மண்டல பூஜை: பக்தர்கள் கூட்டம் அலைமோதியது

**திருச்செந்தூர் ஜூலை 17**
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மண்டல பூஜையில் சாமி தரிசனம் செய்வதற்காக பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 16 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 7-ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடந்தது. 8-ந் தேதி முதல் மண்டல பூஜைகள் தொடங்கின. இந்த காலங்களில் மூலவருக்கு அபிஷேகங்கள் நடைபெறாது. அதற்கு பதிலாக தினமும் மூலவருக்கு அலங்காரம், தீபாராதனை மட்டும் நடைபெற்று வருகின்றது. மேலும் மண்டல பூஜை காலங்களில் தினமும் மூலவருக்கு பதிலாக மூலவரின் உற்சவரான ஸ்ரீ பெலிநாதருக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடைபெற்று வருகின்றது.

அனைத்து கோவில்களிலும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் 48 நாட்கள் மண்டல பூஜை நடக்கும். ஆனால் திருச்செந்தூர் கோவிலில் வருகிற ஆகஸ்டு 14-ந் தேதி ஆவணி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. எனவே, ஆகஸ்டு 6-ந் தேதி வரை 30 நாட்கள் மட்டுமே மண்டல பூஜை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



சங்கரன்கோவில் ஸ்ரீ வையாபுரி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலை பள்ளியில், காமராஜரின் பிறந்த நாளையொட்டி நடந்த கல்வி வளர்ச்சி விழாவில் மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். பள்ளியின் முதல்வர் சுருளிநாதன், துணை முதல்வர் அர்ச்சனா மற்றும் ஆசிரியர்கள் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டினர்.

